குறிப்பு அனுப்பப்பட்டது. மேலும் நிதி ஒதுக்கீடு இன்மையால் இந்த பேரூராட்சி மட்டுமன்றி வேறு முன்மொழி அனுப்பப் பட்ட எந்த பேரூராட்சிக்கும் கட்டிடங்களையோ சாலை களையோ சீர்செய்வதற்காக தலைமைப் பொறியாளரால் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

அமராவதி ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

*வினா எண். 536—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமராவதி ஆற்றின் குறுக்கே பழுதடைந்துள்ள பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் அரசன் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், கரூரில், அமராவதி ஆற்றின் குறுக்கே பழு தடைந்துள்ள பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் பணி மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு திருவாளர்கள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இப் பணி 30—4—82 அன்று முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

திரு. எம். சின்னசாமி : தற்போதுள்ள இந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. ஆகவே புதுப் பாலம் கட்டிய வுடன் இந்தப் பாலத்தில் போக்குவரத்து தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தற்போதுள்ள பாலம் $14\frac{2}{3}$ டன் எடையுள்ள வாகனங்களை மட்டுமே தாங்ககக்கூடிய அளவிற்கு இருக்கிற காரணத்தினால்தான் 70 டன் எடை தாங்கக் கூடிய அளவிற்கு பாலம் ஒன்றை ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதற்குண்டான திட்டம் தீட்டப்பட்டு ஏற்கெனவே கட்டுமானக்கழகத்திற்கு கொடுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக் கப்பட்டு விட்டன. இப்பணி 30—4—82-ல் முடிந்துவிடும்.

ஒன்றியப்பள்ளிகளிலுள்ள ஆயாக்கள் பதவி.

*வினா எண். 537—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

1981 மார்ச் 28]

(அ) ஒன்றிய பள்ளிகளில் ஆயா (மதியம் உணவு சமைக்க ஆயாக்கள்) பதவிகள் காலி ஏற்படும் போது அந்த இடத்திற்கு புதிதாக நியமனம் செய்யப்படுவதில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மாற்று ஏற்பாடு என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ): அரசு ஆணையின்படி பள்ளியில் நியமிக்கப்படும் நடத்தாட்டிகள் மதிய உணவு சமைக்கும் பணிக்காக ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் பணி பள்ளிகளுக்கு பெண் குழந்தைகளை அழைத்து வருவதுதான். எனினும் அவர்கள் தலைமை ஆசிரியர்களுக்கு தங்களுடைய அன்றாட பணி தடைப்படாமல் மதிய உணவு குழந்தைகளுக்கு கொடுப்பதில் உதவியாக இருக்கலாம்.

திரு. தி. கா. நல்லப்பன்: ஏற்கெனவே பள்ளிக்கூடங்களில் ஆயாக்கள் இருந்து அவர்கள் மதிய உணவு சமைத்துப்போட்டு வயதாகிவிட்ட காரணத்தால் அவர்களை வேலையிலிருந்து நிறுத்தியிருக்கிற காரணத்தால் அந்த அந்தப் பள்ளிக்கூடத்தில் உள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் மதிய உணவு சமைக்கும் நிலை இருக்கிறது. அப்படி சமைக்கிற காரணத்தால் படிப்பின் தரம் குறைகிறது. அதை அரசாங்கம் பரிசீலிக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அறுபது வயதுவரையில் அவர்கள் பணியில் இருக்கிறார்கள். 60 வயதுக்குப் பிறகு தான் அவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம்: ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களில் ஆயாக்கள் இடங்கள் காலியாக இருக்கக்கூடிய பள்ளிக்கூடங்கள் எவ்வளவு? அவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. தனிக் கேள்வி போடவும்.